KTEJ 2025 02(2): 45- 65 Kolumpu Tamil E-Journal (KTEJ)

Volume 02, Issue II, 2025

# நகரவாசிகளின் துரித உணவு நுகர்வில் செல்வாக்குச் செலுத்தும் சமூகக் குடித்தொகைக் காரணிகள் பற்றிய நடத்தைப் புவியியலின் நோக்கு: வத்தளை - மாபோல நகர சபையை மையப்படுத்திய விடய ஆய்வு

# A Behavioral Geography Perspective on Socio-Demographic Factors Influencing Fast Food Consumption among Urban Dwellers: A Case Study of the Wattala–Mabola Urban Council

எம். ஏ. எப். முபஷ்ஷிரா

புவியியற் துறை, கொழும்புப் பல்கலைக்கழகம்

*mubashshira314@gmail.com*

**ஆய்வுச் சுருக்கம்**

நகர்ப்புறங்களில் துரித உணவு நுகர்வு அதிகரித்து வரும் நிகழ்வாக மாறியுள்ளது, விரைவான வாழ்க்கை முறை மாற்றங்கள் மற்றும் சமூகப் பொருளாதார மாற்றங்களால் மனித ஆரோக்கியம் பாதிக்கப்படுகின்றது. நிலையான நகர்ப்புறச் சுகாதார உத்திகளை உருவாக்குவதற்கு இவ் நடத்தையை இயக்கும் காரணிகளைப் புரிந்துகொள்வது அவசியம். நடத்தைப் புவியியல் மாதிரியை கோட்பாட்டு அடித்தளமாகப் பயன்படுத்தி, வத்தளை-மாபோல நகர சபை நகரவாசிகளிடையே சமூகக் குடித்தொகைக் காரணிகள் துரித உணவு நுகர்வு நடத்தையை எவ்விதம் பாதிக்கின்றது என்பதை இவ் ஆய்வு ஆராய்கின்றது. தனிப்பட்ட பண்புகள், அறிவாற்றல் உணர்வுகள் மற்றும் சுற்றுச்சூழல் வாய்ப்புக்களின் தொடர்புகள் மூலம் மனித இடஞ்சார்ந்த நடத்தை வடிவமைக்கப்படுகின்றது என்பதை நடத்தைப் புவியியல் மாதிரி வலியுறுத்துகின்றது. இவ் ஆய்விற்கு முதலாம் மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இனத்துவரீதியிலான பிரதிநிதித்துவத்தின் அடிப்படையில் படையாக்க மாதிரியெடுப்பு முறையினைப் பயன்படுத்தி தேர்ந்தெடுக்கப்பட்ட 116 நகரவாசிகளிடமிருந்து கட்டமைக்கப்பட்ட வினாக்கொத்தின் மூலம் முதன்மைத் தரவுகள் சேகரிக்கப்பட்டன. பெறுபேறுகளை விளக்குவதற்கு விவரணப் புள்ளிவிபரவியல்ப் பகுப்பாய்வு முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. நகரவாசிகளின் வயது, வருமானம், கல்வி மற்றும் தொழில் ஆகியவை துரித உணவு நுகர்வை அதிகளவில் பாதிக்கின்றன என்பதை முடிவுகள் வெளிப்படுத்தின. 0–29 வயதுடைய சிறுவர்கள் மற்றும் இளைஞர்கள் (80.1%), நடுத்தர மற்றும் உயர் வருமானக் குழுக்கள் (71.5%), 18 வயதிற்கும் குறைவான பாடசாலை மாணவர்கள் மற்றும் இளங்கலைப்பட்ட மாணவர்கள் ஆகியோரிடையே சுமார் 67.2 சதவீதம் அளவில் அதிகளவான துரித உணவு நுகர்வு காணப்பட்டது. சுவை விருப்பம், சௌகரிகத் தன்மை, சமூகச் செல்வாக்கு, வேலைப்பளு மற்றும் நேரக்கட்டுப்பாடு, தள்ளுபடிச் சலுகைகள் போன்ற நடத்தைக் காரணிகளும் அதிகளவான நுகர்வுக்குப் பங்களித்துள்ளன. பதிலளித்தவர்களில் 72.4% பேர் துரித உணவு விற்பனை நிலையத்திலிருந்து 1–3 கிலோமீற்றருக்குள் வசிப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது, இது உணவுத் தேர்வுகளை வடிவமைப்பதில் அருகாமை மற்றும் அணுகல்தன்மையின் வலுவான பங்கை

எடுத்துக்காட்டுகின்றது. வத்தளை-மாபோல நகர சபைப் பகுதியில் துரித உணவு நுகர்வானது சமூகக் குடித்தொகை, நடத்தை மற்றும் இடஞ்சார்ந்த காரணிகளுக்கு இடையிலான சிக்கலான தொடர்புகளின் விளைவாகும் என்று ஆய்வு முடிவு செய்கின்றது. இவ் முடிவுகள் நகர்ப்புற திட்டமிடுபவர்கள் மற்றும் பொதுச் சுகாதார அதிகாரிகளுக்கு ஆரோக்கியமான மற்றும் நிலையான நகர்ப்புற உணவுச் சூழல்களை மேம்படுத்துவதில் மதிப்புமிக்க நுண்ணறிவுகளை வழங்குகின்றன.

**திறவுச்சொற்கள்:** *இடஞ்சார்ந்த பாங்கு, சமூகக் குடித்தொகைக் காரணிகள், துரித உணவு நுகர்வு, நகரவாசிகள், நடத்தைப் புவியியல்*

## Abstract

Fast food consumption in urban areas has become an increasingly common phenomenon, driven by rapid lifestyle transformations and socio-economic changes. Understanding the factors that influence this behavior is essential for developing sustainable urban health strategies. Guided by the Behavioral Geography Model as its theoretical foundation, this study examines how socio-demographic factors influence fast food consumption behavior among urban residents within the Wattala–Mabola Urban Council area. The model highlights that human spatial behavior results from the interaction between personal characteristics, cognitive perceptions, and environmental opportunities. Both primary and secondary data were utilized. Primary data were collected through a structured questionnaire distributed to 116 urban residents, selected using ethnicity-based stratified sampling. Descriptive statistical analysis was employed to interpret the findings. Results revealed that age, income, education, and occupation significantly influence fast food consumption. Consumption was highest among children and youth aged 0–29 years (80.1%), middle- and high-income earners (71.5%), and including undergraduates and the students of below 18 years (67.2%). Behavioral factors such as taste preferences, convenience, social influence, workload, time constraints, and discount offers also contributed to increased consumption. Additionally, 72.4% of respondents lived within 1–3 km of a fast-food outlet, emphasizing the influence of proximity and accessibility on food choices. The study concludes that fast food consumption in Wattala–Mabola arises from a complex interplay of socio-demographic, behavioral, and spatial factors. These insights are vital for urban planners and public health policymakers in promoting healthier and more sustainable urban food environments.

**Keywords:** *Behavioral geography, Fast food consumption, Socio-demographic factors, Spatial pattern, Urban dwellers*

## 1. அறிமுகம்

உணவு என்பது மனிதனின் அடிப்படைத் தேவைகளில் ஒன்றாகும். அதன் அடிப்படையில் உலகளாவிய ரீதியில் உணவு நுகர்வு தொடர்பான நடத்தையில் பல்வேறு மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன. உணவுப் பாதுகாப்பு, போசணை மிகுந்த உணவு என்பவற்றிற்கு அப்பால் தற்கால உலகில் பெரும்பான்மையான மக்களிடையே துரித உணவு நுகர்வானது நவீனப் போக்காகக் காணப்படுகின்றது. பொதுவாக துரித உணவுகள் கொழுப்பு, உப்பு மற்றும் சர்க்கரை போன்றன அதிகம் உள்ளடங்கிய வகையில் சௌகரிகமான முறையில் தொகுக்கப்பட்ட உணவாக இருப்பதுடன், நீண்ட கால ஊட்டச்சத்து மற்றும் ஆரோக்கியத்தை விட விரைவான நுகர்வுக்காகவே வடிவமைக்கப்பட்டுள்ளது (World Health Organization, 2016).

சமீபத்திய ஆண்டுகளில் உலகளாவிய ரீதியில் துரித உணவு நுகர்வானது அதிகரித்த போக்கினைக் காட்டுவதோடு குறிப்பாக நகர மக்களின் வாழ்க்கை முறையில் மாற்றங்களை நிகழ்த்தி வருகின்றன. அந்தவகையில் இலங்கை போன்ற அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் துரித உணவுக் கலாசாரத்தை ஒப்பீட்டளவில் நகர மக்கள் மிகவும் வேகமாக கடைப்பிடித்து வருகின்றனர். குறிப்பாக நோக்குமிடத்து, இலங்கையின் வத்தளை - மாபோல நகர சபைப் பகுதியானது துரித நகரமயமாக்கல் மற்றும் அபிவிருத்திற்குட்பட்டு வருவதோடு துரித உணவகங்களின் எண்ணிக்கையும் அதிகரித்துச் செல்லும் போக்கினை அவதானிக்க முடிகின்றது. (உதாரணம்: அட்டவணை 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது) இந் நிலைமையானது இப்பகுதிவாழ் நகர மக்களின் வாழ்க்கை முறை மற்றும் உணவு முறையில் பரந்த மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன. மொரோக்கோவில் துரித உணவு நுகர்வாளர்கள் முக்கியமாக இளம்வயதான, அதிக வேலைப்பளுமிக்கவர்களாகக் காணப்படும் அதேவேளை நேரத்தைச் சேமித்து விரைவான சேவையைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் அதிகமாக துரித உணவை நுகர்கின்றனர் (Goubraim & Chakor, 2015). இதன் அடிப்படையில் ஆய்வுப் பிரதேசத்தில் இத்துரித உணவானது அனைவராலும் நுகரப்படுவதோடு அதிகளவில் சிறுவர்கள் மற்றும் இளைஞர்கள் இடையே இதன் செல்வாக்கு மேலோங்கி காணப்படுவதனை அவதானிக்க முடிகின்றது. மேலும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் ஒன்றான இந்தியாவில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்படி நகர்ப்புறங்களில் துரித உணவு நுகர்வானது ஊட்டச்சத்து பாதுகாப்பிற்கு ஒரு சவாலாக அமைவதாகவும், கிராமப்புற மற்றும் நகர்ப்புற துரித உணவு நுகர்வில் வேறுபாடுகள் காணப்படுவதுடன் பொதுவாக இத்தகைய வேறுபாடுகள் நகர மக்களின் அதிக வருமானத்தில் தங்கியுள்ளன (Pandey et al., 2020) என்பது கண்டறியப்பட்டுள்ளது.எனவே, இது போன்ற நிலைமைகள் இலங்கையில் குறிப்பாக வத்தளை - மாபோல நகர சபைப்பகுதியில் காணப்படுகின்றமை கண்டறியப்பட்டுள்ளதோடு அவற்றை ஆராய்வதற்கான அடித்தளத்தை இவ் ஆய்வு வழங்குகின்றது.

மேலும் ஆய்வுப் பிரதேசத்தில் துரித உணவகங்களின் ஸ்தாபகமானது குறிப்பாக மக்களின் கவர்ச்சிக்கும் இலகுவான நுகர்விற்கும் சௌகரியமான முறையில் அமையப் பெற்றுள்ளன. உணவகங்களின் சேவைகள் மிகுந்த போட்டித் தன்மையானதாகக் காணப்படுவதோடு மக்களின் அடைவுத்தன்மையை நோக்காகக் கொண்டு தங்களுடைய சேவைகளை விஸ்தரித்துள்ளன. இவ் உணவகங்களின் உத்திகள் (Discount, take-away, promotions, offer) நகரவாசிகளின் துரித உணவு நுகர்வில் பங்களிப்பதோடு இவை தரமற்ற, போசணையற்ற உணவுப் பழக்கத்தை ஏற்படுத்தி வருகின்றது.

எனவே வத்தளை- மாபோல நகர சபைப் பகுதியில் துரித உணவுப் பழக்கமானது மக்களிடையே அதிகரித்துள்ள போதிலும் துரித உணவு நுகர்வின் மீது எவ்வாறு சமூகக் குடித்தொகைக் காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன? என்பது பற்றிய வரையறுக்கப்பட்ட புரிதல் காணப்படுவதுடன் பெருமளவில் ஆய்வுகள் முன்னெடுக்கப்படவில்லை என்பதனாலும், மேற்குறிப்பிட்ட ஆய்வு இடைவெளியைப் பூர்த்தி செய்யும் வகையில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதிகரித்த துரித உணவு நுகர்வினால் ஏற்படும் எதிர்மறையான விளைவுகளைத் தணிப்பதற்கான உத்திகளை உருவாக்குவதற்கு, துரித உணவு நுகர்வில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளைப் புரிந்துகொள்வது முக்கியமானது. அந்தவகையில்

குறித்த நகர்ப் பகுதியில் துரித உணவு நுகர்வைத் தூண்டும் காரணிகள் பற்றிய விளக்கத்தையும் இவ்வாய்வு வழங்கியுள்ளது. மேலும் நகர்ப்புற உணவு மாற்றங்களுடன் தொடர்புடைய தாக்கங்கள் பற்றிய பரந்த புரிதலுக்கு பங்களிக்கும் என்ற வகையிலும் இவ் ஆய்வு முக்கியத்துவம் பெறுகின்றது.

மேலும் குறிப்பாக இவ் ஆய்வு மானிடப்புவியியலின் உப பிரிவான நடத்தைப் புவியியலின் நோக்கில், தனிநபர்கள் அமைவிடம் மற்றும் இடஞ்சார்ந்த தோற்றப்பாட்டை எவ்வாறு உணர்கின்றார்கள், சிந்திக்கின்றார்கள் மற்றும் முடிவுகளை எடுக்கின்றார்கள் என்பதை ஆராய்வதுடன் இடஞ்சார்ந்த நடத்தையை வடிவமைப்பதில் அறிவாற்றல், அணுகுமுறைகள் மற்றும் உணர்வுகளின் பங்கை வலியுறுத்துகின்றது (Golledge & Stimson, 1997). அதாவது, இங்கு சமூகக் குடித்தொகைப் பண்புகள், மதிப்புகள் மற்றும் மனப்பாங்குகள் எவ்வாறு நகரவாசிகளின் துரித உணவு நுகர்வு மற்றும் தேர்வுகளைப் பாதிக்கின்றன என்பதை ஆராய்கின்றது.

## 2. இலக்கிய மீளாய்வு

**துரித உணவு நுகர்வு மீதான சமூகக்குடித்தொகைக் காரணிகளின் செல்வாக்கு**

### 2.1 அபிவிருத்தி அடைந்த நாடுகளின் அடிப்படையில்

ஐக்கிய அமெரிக்காவில் 255 மாதிரிகளைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட ஆய்வில், வயது ரீதியான துரித உணவு நுகர்வின் பாங்கு தொடர்பான கண்டுபிடிப்புக்கள் அட்டவணை 1 இன் அடிப்படையில் அமைகின்றன.

மேலும் பெண்களில் 72.9 சதவீதமானோரும் ஆண்களில் 27.1 சதவீதமானோரும் துரித உணவை நுகர்ந்துள்ளனர். நுகர்வோரின் கல்வித்தரத்தின் செல்வாக்கு தொடர்பாகக் கண்டறியப்பட்டபோது, உயர்கல்வி டிப்ளோமா மட்ட கல்வித்தரம் உடையவர்கள் அதிகளவில் சுமார் 49.8% உம் அதனையடுத்து உயர்கல்வி டிப்ளோமா மட்டத்திலும் குறைவான கல்வித்தரமுடையவர்கள் 18.4% உம் பொதுவான பட்டக் கற்கைகளை மேற்கொண்டவர்கள் 13.1% உம் நான்கு வருட பட்டக் கற்கைகளை மேற்கொண்டவர்கள் 10.2% உம் பட்டதாரிகள் 8.6% உம் துரித உணவை நுகர்வதாக கண்டறியப்பட்டுள்ளன (Eckert & Vojnovic, 2017).

துரித உணவு நுகர்வின் பாங்கானது வயது அடிப்படையில் 45 – 54 வயதினை உடையவர்களிடையே அதிகளவாகக் காணப்படுகின்றது. (சுமார் 25.2%).

**அட்டவணை 1: வயது அடிப்படையில் துரித உணவு நுகர்வின் பாங்கு**

| வயது | சதவீதம் |
|---|---|
| 18 – 24 | 5.2% |
| 25 – 34 | 10.4% |
| 35 – 44 | 15.6% |
| 45 – 54 | 25.2% |
| 55 – 64 | 20.4% |
| 65 மேல் | 23.2% |

மூலம்: (Eckert & Vojnovic, 2017).

கனடாவில் 5 கனேடிய நகரங்களில் 16 – 30 வயதினையுடைய இளைஞர்கள் மத்தியில் துரித உணவு நுகர்வின் பாங்கு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வில், முறையே 16 – 18 (17.1%), 19 – 21 (31.8%), 22 – 25 (28.1%), 26 – 30 (23.6%) துரித உணவை நுகர்வதாகவும் மேலும் பால் அடிப்படையில் பெண்களில் 65 சதவீதமானோரும் ஆண்களில் 35 சதவீதமானோரும் துரித உணவை நுகர்வதாகவும் கண்டறியப்பட்டுள்ளன (Liu et al., 2020). போர்த்துக்கலில் துரித உணவை நுகரும் உயர்கல்வி மாணவர்களை மாதிரியாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் படி, சராசரியாக 21.1 வயதினையுடையோரிடையே துரித உணவு நுகர்வுப் பாங்கு அதிகம் காணப்பட்டதுடன் ஆண்களின் சராசரி வயது இடை 21.5 ஆகவும் பெண்களின் சராசரி வயது இடை 20.9 ஆகவும் காணப்பட்டன. மேலும் அம் மாணவர்களுள் ஆண்களில் 34.6% உம் பெண்களில் 65.4% உம் துரித உணவை நுகர்ந்துள்ளனர் (Oliveira & Raposo, 2024). லண்டனின் Sunderland பல்கலைக்கழகத்தில் தாதியியல் மற்றும் பொதுச் சுகாதாரத் துறையில் உயர்கல்வியை தொடரும் மாணவர்களுள் 235 மாதிரிகளை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் துரித உணவு நுகர்வு தொடர்பான வினாவுக்கு மாணவர்களின் துலங்கலானது அட்டவணை 2 இன் அடிப்படையில் காணப்பட்டது. மேலும், இம் மாதிரிகளின் துலங்கல்களை பாலின அடிப்படையில் நோக்கும் போது பெண்களில் 72 சதவீதம் ‘‘ஆம்’’ எனவும் ஆண்களில் 62.3 சதவீதம் ‘‘ஆம்’’ எனவும் துலங்கல்களை வெளிப்படுத்தியுள்ளனர் (Parvin et al., 2023). எனவே மேற்குறிப்பிடப்பட்ட முன்னோடி ஆய்வுகளின்படி அபிவிருத்தி அடைந்த நாடுகளில் பொதுவாக இளம் வயதினர் மத்தியிலும் ஆண்களை விட அதிகளவில் பெண்கள் மத்தியிலும் துரித உணவு நுகர்வானது காணப்படுகின்றது.

**அட்டவணை 2: துரித உணவு நுகர்வு தொடர்பான வினாவுக்கு மாணவர்களின் துலங்கல்**

| நீங்கள் துரித உணவின் மீது அதிக நாட்டம் உடையவரா? | | |
|---|---|---|
| **வயது** | **ஆம்** | **இல்லை** |
| 20 – 29 | 79% | 21% |
| 30 – 39 | 66.7% | 33.3% |
| 40 – 49 | 55% | 45% |
| 50 – 59 | 33.3% | 66.7% |

மூலம்: (Parvin et al., 2023)

### 2.2 அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் அடிப்படையில்

கிழக்கு ஆபிரிக்க Baraton பல்கலைக்கழகத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில், 18 – 25 வயதினையுடையவர்கள் 68% உம் 26 – 35 வயதினையுடையவர்கள் 18% உம் 36 – 44 வயதினையுடையவர்கள் 10% உம் 40 வயதில் 4% உம் துரித உணவை நுகர்ந்துள்ளதுடன் பால்நிலை அடிப்படையில் நோக்குகையில் 52% ஆண்களிலும் 48% பெண்களிலும் துரித உணவு நுகர்வுப் பாங்கானது காணப்பட்டது (Odongo et al., 2024). இது போன்ற மற்றுமொரு ஆய்வு 2015 இல் மொரோக்கோவில் 142 மாதிரிகளை மையமாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டது. இதில் 45.8 சதவீதம் ஆண்களும் 43 சதவீதம் பெண்களும் துரித உணவை நுகர்ந்துள்ளதுடன் எஞ்சிய 11.3 சதவீதமானோர் துரித உணவுகளை நுகர்வதில்லை எனவும் முடிவுகள் பெறப்பட்டுள்ளன. இதனை வயது அடிப்படையில் நோக்குகையில் 15 – 25 வயதுடையவர்களில் 29.6%, 36 – 45 வயதுடையவர்களில் 16.2%, 26 – 35 வயதுடையவர்களில் 34.5%, 46 – 55 வயதுடையவர்களில் 6.3%, 55 வயதிற்கு மேற்பட்டவர்களில் 2.1% துரித உணவை நுகரும் பழக்கத்தை கொண்டிருந்தனர் (Goubraim & Chakor, 2015). மேலும்

துருக்கியில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் போது துரித உணவு நுகர்வில் பெண்களின் சராசரி வயது 21.4 ஆகவும் ஆண்களின் சராசரி வயது 20.8 ஆகவும் காணப்பட்டது (Arslan et al., 2022). மலேசியாவில் 18 – 29 வயதுடைய 465 மலேசிய இளைஞர்களை வைத்து மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் துரித உணவு நுகர்வின் பாங்கானது ஆண்களிடத்தில் 15.6 சதவீதமும் பெண்களிடத்தில் 84.4 சதவீதமும் காணப்பட்டது. தொழில் அடிப்படையில் நோக்குகையில் தொழில் புரிவோர் 8.9%, வீட்டுப் பெண்கள் 0.2%, மாணவர்கள் 90.9% உம் துரித உணவை நுகர்ந்துள்ளனர். மேலும் மாதவருமானம் 4849 MYR பெறுபவர்கள் மத்தியில் 15.3 சதவீதமும் 4850–10959 MYR பெறுபவர்கள் மத்தியில் 83.7 சதவீதமும் 10960 MYR இற்கு அதிமாக பெறுபவர்கள் மத்தியில் ஒரு சதவீதமும் துரித உணவு நுகர்வானது கண்டறியப்பட்டுள்ளது. இத்தகைய மலேசிய இளைஞர்களிடத்தில் துரித உணவு நுகர்வின் போக்கு வயது, இனம் மற்றும் கல்வித்தரம் அடிப்படையில் எவ்வாறு வேறுபட்டு காணப்படுகின்றது என்பதை அட்டவணை 3 இன் ஊடாக கண்டுகொள்ளலாம்.

இந்தியாவின் லக்னோ மாவட்டத்தில் 9 – 13 வயதுடைய ஐந்து வெவ்வேறு பாடசாலைகளில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட 100 மாணவர்களை மையப்படுத்தி மேற்கொள்ளப்பட்ட ஆய்வில், ஆண் மாணவர்களில் 56 வீதமானோரும் பெண் மாணவர்களில் 44 வீதமானோரும் துரித உணவை நுகர்வதாகக் கண்டறியப்பட்டுள்ளன (Singh & Mishra, 2014). எனவே மேற்குறிப்பிடப்பட்ட அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் முன்னோடி ஆய்வுகளின்படி பொதுவாக இளம் வயதினர் மத்தியிலும் பெண்களை விட அதிகளவில் ஆண்கள் மத்தியிலும் துரித உணவு நுகர்வானது காணப்படுகின்றது. மாறாக துரித உணவு நுகர்வானது மலேசியாவில் ஆண்களை விட அதிகளவில் பெண்கள் மத்தியில் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

**அட்டவணை 3: மலேசிய இளைஞர்களிடத்தில் துரித உணவு நுகர்வின் போக்கு (வயது, இனம் மற்றும் கல்வித்தரம் அடிப்படையில் துரித உணவு நுகர்வாளர்களின் சதவீதம்)**

| வயது | சதவீதம் | இனம் | சதவீதம் | கல்வித்தரம் | சதவீதம் |
|---|---|---|---|---|---|
| 18 – 20 | 32.8% | மலே | 95.3% | SPM or அதனிலும் குறைவு | 4.4% |
| 21 – 23 | 63% | சீனர் | 3.7% | டிப்ளோமா மட்டம் | 7.2% |
| 24 - 26 | 4% | இந்தியர் | 0.7% | பட்டக் கல்வியை தொடரல் | 88.1% |
| 27 - 29 | 0.2% | வேறு | 0.2% | வேறு | 0.2% |

மூலம்: (Hatta et al., 2022)

### 2.3 இலங்கையின் அடிப்படையில்

இலங்கையின் 205 பல்கலைக்கழக மாணவர்களை மையமாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் பெண்களில் 62 சதவீதமானோரும் ஆண்களில் 38 சதவீதமானோரும் துரித உணவை நுகர்ந்துள்ளதுடன் ஆண்களின் சராசரி வயது 23.4 (∓) 1.18 ஆகவும் பெண்களின் சராசரி வயது 21.94 (∓) 1.25 ஆகவும் காணப்பட்டது (Jayasinghe & De Silva , 2014). இரத்தினபுரி மாவட்டத்தில் 15 – 29 வயதுடையவர்களில் 100 மாதிரிகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் 44 சதவீதம் ஆண்களும் 56 சதவீதம் பெண்களும் துரித உணவை நுகர்ந்துள்ளனர். மேலும்


உயர்தரம் கல்வி கற்கும் மாணவர்களில் 17 சதவீதமானோரும் பல்கலைக்கழக மாணவர்களுள் 27 சதவீதமானோரும் துரித உணவை நுகர்ந்துள்ளனர் (Priyanth & Dassanayaka, 2022). மேலும் கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களில் 150 மாதிரிகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் படி பெண்களில் 55 சதவீதமானோரும் ஆண்களில் 45 சதவீதமானோரும் துரித உணவை நுகர்ந்துள்ளனர். வயது அடிப்படையில் 21 – 26 வயதுடையவர்களில் 47 சதவீதமும் 27 – 32 வயதுடையவர்களில் 34 சதவீதமும் 33 – 38 வயதுடையவர்களில் 7 சதவீதமும் 39 – 44 வயதுடையவர்களில் 5 சதவீதமும் 45 – 50 வயதுடையவர்களில் 4 சதவீதமும் 51 வயதிற்கு மேற்பட்டவர்களில் 3 சதவீதமும் காணப்பட்டது. இம் மாதிரிகளின் துரித உணவு நுகர்வை கல்வித்தரம் அடிப்படையில் நோக்குகையில், பட்டதாரிகள் 61%, முதல் பட்டத்தை நிறைவு செய்தவர்கள் 21%, பட்டப்பின் கல்வியை நிறைவு செய்தவர்கள் 5%, மருத்துவ பட்டதாரிகள் 2%, டிப்ளோமாதாரிகள் 2% உம் துரித உணவை நுகர்ந்துள்ளனர் (Nirmani et al., 2017). எனவே மேற்குறிப்பிடப்பட்ட முன்னோடி ஆய்வுகளின்படி பொதுவாக இளம் வயதினர் மத்தியிலும் ஆண்களை விட அதிகளவில் பெண்கள் மத்தியிலும் துரித உணவு நுகர்வானது காணப்படுகின்றது. மேலும் இலங்கையில் அநுராதபுரம் நகரில் துரித உணவு நுகர்வு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் துரித உணவு நுகர்வானது மாதவருமானம் இலங்கை ரூபாய் 500–20000 பெறுபவர்கள் மத்தியில் 11.4 சதவீதமும் 20000–50000 பெறுபவர்கள் மத்தியில் 39.5 சதவீதமும் 50000 இற்கும் மேலதிகமாகப் பெறுபவர்கள் மத்தியல் 49.1 சதவீதமும் காணப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது (Uduruwana, 2015).

இவ் அனைத்து முன்னோடி ஆய்வுகளிலும் ஆராயப்பட்டவாறு சமூகக் குடித்தொகைக் காரணிகள் துரித உணவு நுகர்வில் செல்வாக்குச் செலுத்தும் விதம் தொடர்பாக வத்தளை–மாபோல நகர சபைப் பகுதியை மையப்படுத்தி எவ்வித ஆய்வுகளும் முன்னெடுக்கப்படவில்லை என்பதால் இவ் ஆய்வு இடைவெளியைப் பூர்த்தி செய்யும் வகையில் நடத்தைப் புவியியலை கோட்பாட்டுப் பின்புலமாகப் பயன்படுத்தி இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 3. ஆய்வு முறையியல்

### 3.1 ஆய்வுப் பிரதேசம்

மேல் மாகாணத்தில் கம்பஹா மாவட்டத்திலுள்ள வத்தளை பிரதேச செயலாளர்ப் பிரிவிற்குட்பட்ட வத்தளை–மாபோல நகர சபையே ஆய்வுக்காகத் தேர்வு செய்யப்பட்ட பிரதேசமாகும். வத்தளை பிரதேச செயலாளர்ப் பிரிவில் மொத்தமாக 46 கிராமசேவகர் பிரிவுகள் உள்ளடங்குகின்றன. அதில் ஆறு கிராமசேவகர் பிரிவுகள் முழுமையாக அபிவிருத்தி செய்யப்பட்ட பிரிவுகளாக வத்தளை–மாபோல நகர சபைக்குள் உள்ளடங்குகின்றன. இப்பிரதேசம் 7.0021° N அகலாங்கு மற்றும் 79.9025° E நெட்டாங்கில் அமையப்பெற்றுள்ளது. வத்தளை பிரதேச செயலாளர்ப் பிரிவானது வடக்கில் நீர்க்கொழும்பு களப்பையும் தெற்கில் களனி ஆற்றையும் கிழக்கில் ஜாஎல–மகர பிரதேச செயலாளர்ப் பிரிவையும் மேற்கில் இந்து சமுத்திரத்தையும் கொண்டு காணப்படுகின்றது. வத்தளை–மாபோல நகரசபைக்குட்பட்ட பிரதேசத்தின் மொத்த சனத்தொகையாக 31,471 காணப்படுவதோடு பல்லின சமூகங்களைக் கொண்ட கலாசாரத்தையுடைய மக்களைக் கொண்ட ஒரு நகர்ப் பகுதியாகும்.




**உரு 1: ஆய்வுப் பிரதேசம்**

மூலம்: ஆய்வாளரால் தயாரிக்கப்பட்டது, 2025

இவ் ஆய்வுப் பிரதேசத்தில் அமையப்பெற்றிருக்கும் பிரதான தேசிய மற்றும் சர்வதேச துரித உணவகங்கள் பின்வரும் அட்டவணையில் காட்டப்படடுள்ளன.

**அட்டவணை 4: வத்தளை – மாபோல நகர சபைப் பகுதியில் அமையப்பெற்றிருக்கும் துரித உணவகங்கள்**

| Fast Food Restaurants | | | |
|---|---|---|---|
| 1 | Burger King | 6 | Domino’s Pizza |
| 2 | KFC | 7 | Street Burger |
| 3 | Pizza Hut | 8 | Crepe Runner |
| 4 | Dinemore | 9 | Takemore Burger Shop |
| 5 | Harpo’s Pizza & Pasta | 10 | Foodies Spot |

மூலம்: ஆய்வாளரால் தயாரிக்கப்பட்டது, (2025)

### 3.2 தரவு சேகரிப்பு முறை

இவ் ஆய்வுக்காக முதலாம் மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகளின் மூலம் தரவுகள் சேகரிக்கப்பட்டன. அதிகளவில் முதலாம் நிலைத் தரவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளதோடு வினாக்கொத்தின் மூலம் தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன. வினாக்கொத்தானது கட்டமைக்கப்பட்டதாகவும் கலப்பு முறையிலும் வடிவமைக்கப்பட்டுள்ளது. அவை மாதிரியாகத் தெரிவு செய்யப்பட்ட நகரவாசிகளுக்கு வழங்கப்பட்டது. இவற்றுக்கு மேலதிகமாக இரண்டாம் நிலைத் தரவுகளான ஆய்வு அறிக்கைகள், புத்தகங்கள், இணைய மூலங்கள், வத்தளை பிரதேச செயலாளர்ப் பிரிவின் 2024 ஆம் ஆண்டின் அறிக்கை போன்றவற்றின் மூலம் தரவுகள் சேரிக்கப்பட்டன.

### 3.3 மாதிரியெடுப்பு முறை

இவ் ஆய்வுக்காக நிகழ்த்தகவு மாதிரியெடுப்பு முறையான படையாக்க மாதிரியெடுப்பு முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. படையாக்க மாதிரியெடுப்பு முறையில் ஆறு கிராமசேவகர் பிரிவுகளிலும் இருந்து ஒவ்வொரு இனமும் படையாகப் பிரிக்கப்பட்டு இனக்குழுக்களின் அடிப்படையில் மாதிரிகள் தெரிவு செய்யப்பட்டன. இப் பிரதேசத்திற்குட்பட்ட ஆறு கிராமசேவகர் பிரிவுகளிலும் மொத்த சனத்தொகை 31,471 ஆக காணப்படுகின்றன. எனவே சனத்தொகையானது அளவில் பெரிதாகக் காணப்படுவதனால் குறிப்பிட்ட கால வரையறை மற்றும் ஆய்வாளனினால் அதிகரித்த மாதிரிகளை அணுகுவதில் உள்ள சிக்கல் நிலைகள் என்பவற்றைக் கருத்திற்கொண்டு, தெலங்கபாத்த, எவரிவத்த, வத்தளை, மாபோல, கல்வெடிய, வெலிகடமுள்ள ஆகிய 6 வலயங்களில் இருந்தும், 5 இனக் குழுக்களாகப் பிரித்து அவ் ஒவ்வொரு குழுக்களிலும் இருந்து 300 நகரவாசிகளுக்கு ஒரு வினாக்கொத்து எனும் விகிதாசாரத்தின் அடிப்படையில் 116 மாதிரிகள் எழுமாறாகத் தெரிவுச் செய்யப்பட்டுள்ளன.

இதன் அடிப்படையில் ஒவ்வொரு கிராமசேவகர் பிரிவிலிருந்தும் எடுக்கப்பட்ட மாதிரிகளின் எண்ணிக்கையை பின்வரும் அட்டவணை காட்டுகின்றது.

**அட்டவணை 5: வினாக்கொத்து மாதிரியெடுப்பு அட்டவணை**

| கிராமசேவகர் பிரிவுகள் | | இனக் குழுக்கள் | | | | | மொத்த மாதிரிகள் |
|---|---|---|---|---|---|---|---|
| | | சிங்களவர் | தமிழர் | முஸ்லிம் | பறங்கியர் | வேறு | |
| 01 | தெலங்கபாத்த | 9 | 3 | 2 | 1 | 1 | 16 |
| | | | | | | | |
| 02 | எவரிவத்த | 12 | 4 | 1 | 1 | 1 | 19 |
| 03 | வத்தளை | 7 | 4 | 1 | 1 | - | 13 |
| 04 | மாபோல | 6 | 2 | 10 | 1 | - | 19 |
| 05 | கல்வெடிய | 5 | 5 | 1 | - | - | 11 |
| 06 | வெலிகடமுள்ள | 12 | 6 | 18 | 2 | - | 38 |
| **மொத்த மாதிரிகளின் எண்ணிக்கை** | | | | | | | **116** |

மூலம்: (வத்தளை பிரதேச செயலாளர்ப் பிரிவின் ஆண்டறிக்கை, 2024)

### 3.4 தரவுப் பகுப்பாய்வு


ஆய்வு நோக்கத்தின் அடிப்படையில் வினாக்கொத்தின் மூலம் சேகரிக்கப்பட்ட அளவை மற்றும் பண்பு சார்ந்த தரவுகள் Microsoft Excel மென்பொருளினைப் பயன்படுத்தி விவரணப் புள்ளிவிபரவியல்ப் பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டுள்ளன. பெறுபேறுகள் வட்ட மற்றும் சலாகை வரைபுகளாகக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. ஆய்வுப் பிரதேசத்தை வடிவமைப்பதற்கு ArcGIS 10.8 மென்பொருள் பயன்படுத்தப்பட்டது. மேலும் ஆய்வுப் பிரதேசத்தில் துரித உணவு நுகர்வுக்கான இடஞ்சார்ந்த நடத்தையை சமூகக் குடித்தொகைப் பண்புகள் மற்றும் உணர்வுகள் எவ்வாறு பாதிக்கின்றன என்பதை விளக்க, இவ் ஆய்வு, நடத்தைப் புவியியல் மாதிரியை அதன் தத்துவார்த்த அடிப்படையாகப் பயன்படுத்தியுள்ளது.

## 4. பெறுபேறுகளும் கலந்துரையாடலும்

### 4.1 நகரவாசிகளின் துரித உணவு நுகர்வு நடத்தையில் சமூகக் குடித்தொகைக் காரணிகளின் செல்வாக்கு

**வயது**

ஆய்வுப்பிரதேசத்தில் துரித உணவு நுகர்வின் பாங்கினை வயது அடிப்படையில் நோக்கும் போது உரு 2 இல் காட்டப்பட்டுள்ளவாறு 18 வயதிற்கும் குறைவானவர்கள் 42.2 சவீதமும், 19–29 வயதிற்கிடைப்பட்டவர்கள் 37.9 சவீதமும், 30–49 வயதிற்கிடைப்பட்டவர்கள் 12.9 சவீதமும், 50 வயதிற்கு மேற்பட்டவர்கள் 6.9 சவீதமும் துரித உணவை நுகர்கின்றனர். எனவே நூறு சதவீதத்தில் சுமார் 80.1 சதவீதமான 0–29 வயதிற்கு இடைப்பட்ட சிறுவர்கள் மற்றும் இளம் வயதுப் பிரிவினர்களே அதிகளவில் துரித உணவை நுகர்கின்றனர். அதே வேளை 50 வயதிற்கு மேற்பட்டவர்கள் மிகக் குறைந்த மட்டத்திலே துரித உணவை உட்கொள்பவர்களாகக் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.




**உரு 2: நகரவாசிகளின் வயது ரீதியான துரித உணவு நுகர்வுப் பரம்பல்**


மூலம்: கள ஆய்வு, 2025

எனவே நூறு சதவீதத்தில் சுமார் 80.1 சதவீதமானவர்கள் 0–29 வயதிற்கு இடைப்பட்ட சிறுவர்கள் மற்றும் இளைஞர்களாகவே காணப்படுகின்றனர். கிழக்கு ஆபிரிக்க Baraton பல்கலைக்கழகத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் அதிகளவில் 18–25 வயதினையுடையவர்கள் 68 சதவீதம் துரித உணவை நுகர்ந்துள்ளனர் (Odongo et al., 2024). மேலும் 18–29 வயதுடைய மலேசிய இளைஞர்களிடையே மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் குறிப்பாக 95.8 சதவீதம் 18–23 வயதிற்கிடைப்பட்டவர்கள் அதிகளவில் துரித உணவை நுகர்ந்துள்ளனர் (Hatta et al., 2022). இலங்கையின் கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்படி 21–32 வயதிற்கிடைப்பட்டவர்களில் சுமார் 81 சதவீதமானவர்கள் துரித உணவை நுகர்ந்துள்ளனர் (Nirmani et al., 2017). எனவே மேற்குறிப்பிட்ட முன்னோடி ஆய்வுகளின் பெறுபேறுகளை குறித்த ஆய்வின் பெறுபேறுகளுடன் ஒப்பிடுகையில் முன்னோடி ஆய்வுகள் 18 வயதிற்கு மேற்பட்ட இளைஞர்களை மையப்படுத்தி அமையப் பெற்றிருத்தல் மற்றும் தெரிவு செய்யப்பட்ட மாதிரி அளவில் காணப்படும் வேறுபாடுகள் போன்றவற்றின் காரணமாக பெறுபேறுகளில் மாற்றங்கள் காணப்படுகின்றன. இருப்பினும் இளைஞர்கள் மத்தியில் அதிகரித்த துரித உணவு நுகர்வு காணப்படுகின்றது. எனினும் (Eckert & Vojnovic, 2017) ஆகியோரால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் வயது அடிப்படையில் குறித்த ஆய்வுடன் முரண்பட்ட பெறுபேறுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

இருப்பினும் பல முன்னோடி ஆய்வுகளில் கண்டறியப்பட்டுள்ளவாறு, குறித்த ஆய்வுப் பிரதேசத்தில் இளைஞர்களிடம் அதிகரித்த துரித உணவு நுகர்வு காணப்படுவதோடு குறிப்பாக சிறுவர்கள் மத்தியிலும் அதிகளவான நுகர்வு காணப்படும் நிலை கண்டறியப்பட்டுள்ளது. நகர்ப்பகுதிகளில் துரித உணவகங்களின் அமைவிடம், வதிவிடங்களுக்கும், பாடசாலை மற்றும் பகுதி நேர வகுப்பறைகளுக்கும் அருகாமையில் காணப்படுவது சிறுவர்கள் மற்றும் இளைஞர்களை கவர்வதுடன் அடிக்கடி துரித உணவை நுகர்வதில் நாட்டத்தை ஏற்படுத்துகின்றது. மேலும் துரித உணவுகளின் சுவை மற்றும் கவர்ச்சிகரமான வடிவமைப்பு என்பன சிறுவர்களை அதிகம் பாதிக்கின்றது. இளைஞர்கள் ஒன்றாக இணைந்து பொழுதுபோக்கிற்காக மகிழ்ச்சியாக சாப்பிடக்கூடிய பழக்கத்திற்கான வாய்ப்புக்களை இத்துரித உணவுகள் ஏற்படுத்திக் கொடுப்பதனால் அதிகளவாக இளைஞர்களிடம் இந்நுகர்வு காணப்படுகின்றது. எனவே இவ்வாறான காரணங்களுக்காக குறித்த ஆய்வுப் பிரதேசத்தில் சிறுவர்கள் மற்றும் இளைஞர்களிடம் அதிகரித்த துரித உணவு நுகர்வுப் பழக்கம் காணப்படுகின்றது.

**பால்நிலை**

நகரவாசிகளின் பால் அடிப்படையிலான வேறுபாட்டை நோக்கும் போது, மேற்படி உரு 3 இல் காட்டப்பட்டுள்ளவாறு ஆண்கள் 45.7 சதவீதமும் பெண்கள் 54.3 சதவீதமும் துரித உணவை நுகர்கின்றனர். ஆண்களை விட பெண்கள் அதிகமாக நுகர்ந்தாலும் பாரிய அளவில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையில் வித்தியாசம் இல்லை. எனவே துரித உணவை ஆண்கள் மற்றும் பெண்கள் இருபாலாரும் நுகரக்கூடியவர்களாக உள்ளனர். ஆனால் ஆண்களை விட பெண்கள் சற்று அதிகமாக நுகர்கின்றமையை ஆய்வின் முடிவுகள் எடுத்துக்காட்டுகின்றன. இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுவொன்றில் 62 சதவீதமான பெண்களும் 38 சதவீதமான ஆண்களும் துரித உணவை நுகர்ந்துள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது (Priyanth & Dassanayaka, 2022). மேலும் போர்த்துக்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றிலும் பெண்கள் 65.4 சதவீதமானவர்களும் ஆண்கள் 34.6 சதவீதமானவர்களும் துரித உணவை நுகர்ந்துள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது (Oliveira & Raposo, 2024). எனவே மேற்குறிப்பிடப்பட்ட முன்னோடி ஆய்வுகளுடன் ஒப்பிடுகையில் குறித்த ஆய்வுப் பகுதியிலும் ஆண்களை விட பெண்கள் மத்தியிலே அதிகளவான துரித உணவு நுகர்வு காணப்படுகின்றது. இருப்பினும் குறித்த பிரதேசத்தில் ஆண்கள் மற்றும் பெண்களுக்கு இடையில் பாரிய வேறுபாடுகள் இல்லை என்பது புலனாகின்றது. இலங்கையில் பெண்களின் சனத்தொகையில் ஏற்பட்டுள்ள அதிகரிப்பு மற்றும் வாழ்க்கையில் ஏற்பட்டுள்ள தொழில் முனைவுடன் தொடர்பான மாற்றம் ஆகியன பெண்களின் வகிபங்கினை மாற்றியமைப்பதுடன் வேலைப்பளு மற்றும் நேரக் கட்டுப்பாடுகளை முகாமைத்துவம் செய்வதற்கு துரித உணவு முறையில் அதிக நாட்டம் செலுத்தக்கூடியவர்களாகப் பெண்கள் காணப்படுகின்றனர்.





**உரு 3: நகரவாசிகளின் பால்நிலை ரீதியான துரித உணவு நுகர்வுப் பரம்பல்**

மூலம்: கள ஆய்வு, 2025

**இனக்குழு**

நகரவாசிகளின் இன அடிப்படையில் அமைந்த துரித உணவு நுகர்வுப் பரம்பலினை நோக்கும் போது குறித்த ஆய்வினுடைய மாதிரிகள் ஒவ்வொரு கிராமசேவகர் பிரிவுகளிலும் இனரீதியான பிரதிநிதித்துவத்தை மையமாகக் கொண்டு தெரிவு செய்யப்பட்டுள்ளமையினால் இங்கு காட்டப்பட்டுள்ள உரு 4 இன் அடிப்படையில் துரித உணவை நுகரும் இன ரீதியான பரம்பல் வெளிப்படுத்தப்பட்டாலும் அதிகம் துரித உணவை நுகர்வோர்களாக சிங்களவர்கள் காணப்படுகின்றனர் எனும் முடிவுக்கு வர முடியாது.




**உரு 4: நகரவாசிகளின் இன அடிப்படையில் அமைந்த துரித உணவு நுகர்வுப் பரம்பல்**


மூலம்: கள ஆய்வு, 2025

**மாதவருமானம்**

துரித உணவை நுகரும் நகரவாசிகளின் மாதவருமானது உரு 5 இல் காட்டப்பட்டுள்ளவாறு 2.6 சதவீதம் 30000 இற்கும் குறைவாகவும், 25.9 சதவீதம் 30001–60000 இற்கு உட்பட்டதாகவும், 26.7 சதவீதம் 60001–100000 இற்கு இடைப்பட்டதாகவும், 44.8 சதவீதம் 100001 இற்கு மேற்பட்டதாகவும் காணப்படுகின்றது. அதிலும் குறிப்பாக அதிகளவில் துரித உணவை நுகரக் கூடியவர்களாக மாதவருமானம் 100001 இற்கும் அதிகமாக பெறுபவர்களிடையே காணப்படுகின்றது. மாதவருமானம் 30000 இற்கும் குறைவாக பெறுபவர்களிடையே நுகர்வானது மிகக் குறைவான மட்டத்தில் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. எனவே அதிக வருமானம் காணப்படுபவர்களிடையே இவ்வாறான துரித உணவு நுகர்வுப் பழக்கம் அதிகளவில் காணப்படுகின்றது. இது ஒரு நகர்ப்பிரதேசமாக காணப்படுவது குறித்த துரித உணவகங்களின் அமைவிடப் பரம்பலுக்கு ஏதுவாக காணப்படுவதோடு அவைகளை அண்மித்து வசதியானவர்களைச் சூழ கொண்டு காணப்படும் நிலை காணப்படுகின்றது.

இந்நிலைமையினை முன்னோடி ஆய்வுகளுடன் ஒப்பிடுகையில் (Hatta et al., 2022) , (Khongrangjem et al., 2018) போன்ற ஆய்வுகள் முரண்பட்ட பெறுபேறுகளை எடுத்துக்காட்டுகின்றன. அதாவது மாதவருமானம் மத்திம அளவில் பெறுபவர்களிடையே அதிகளவான நுகர்வும் மிகக் குறைந்தளவான நுகர்வு அதிக மாத வருமானம் பெறுபவர்களிடையே காணப்படுகின்றது. இந்நிலைமைக்கு மக்கள் துரித உணவு நுகர்வின் ஆரோக்கிய விளைவுகள் தொடர்பான விழிப்புணர்வை பெற்றிருப்பதை குறிப்பிடலாம். இருப்பினும்

(Nirmani et al., 2017) ஆகியோர்கள் மேற்கொண்ட ஆய்வில் மாதவருமானம் அதிகம் பெறுபவர்களிடையே அதிகளவான நுகர்வும் மிகக் குறைவான மற்றும் மத்திம அளவில் மாதவருமானம் பெறுபவர்களிடையே ஓரளவு சமபெறுமானங்களைக் கொண்ட நுகர்வும் காணப்படுவதனை எடுத்துக்காட்டுகின்றது. எவ்வாறாயினும் (Uduruwana, 2015) எனும் ஆய்வில் குறித்த ஆய்வு முடிவுகளுக்கு ஒத்திசைவான முடிவுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. மேலும் இதில் காணப்படக்கூடிய முனைப்பான அம்சமாக எடுத்துக்காட்டப்படுவது நகரவாசிகளில் ரூபா 60001 இற்கு மேல் மாதவருமானம் பெறுபவர்களின் சதவீதமாக 71.5 காணப்படுகின்றது. எனவே இது மத்திம மற்றும் அதிக வருமானம் எனும் கட்டமைப்பிலே உள்ளடக்கக் கூடியதாக உள்ளது. நகரவாசிகளின் மாதவருமான அடிப்படையில் துரித உணவு நுகர்வுப் பாங்கானது மத்திம மற்றும் அதிக வருமானம் பெறுபவர்களிடையே காணப்படுகின்றது என்ற முடிவுக்கு வரலாம்.





**உரு 5: துரித உணவு நுகர்வாளர்களின் மாதவருமான நிலை**

மூலம்: கள ஆய்வு, 2025

**கல்வி நிலை**

துரித உணவு நுகர்வாளர்களின் கல்வி நிலையானது உரு 6 இல் காட்டப்பட்டுள்ளவாறு, பாலர் பாடசாலை மாணவர்களிடத்திலே 0.9 சதவீதமும் தரம் 1 தொடக்கம் 5 வரையான மாணவர்களிடையே 8.6 சதவீதமும், தரம் 6 தொடக்கம் 10 வரையான மாணவர்களிடையே 17.2 சதவீதமும், சாதாரண தர மாணவர்களிடையே 19.8 சதவீதமும் உயர்தர மாணவர்களிடையே 20.7 சதவீதமும் இளங்கலைப்பட்ட மாணவர்களிடையே 25 சதவீதமும் முதுகலைப்பட்ட மாணவர்களிடையே 4.3 சதவீதமும் ஏனைய உயர்கற்கை மாணவர்களிடையே 3.4 சதவீதமும் துரித உணவு நுகர்வானது குறித்த பிரதேசத்தில் காணப்படுகின்றது. அதிகளவில் சுமார் 25 சதவீதமான நுகர்வானது இளங்கலைபட்ட மாணவர்களிடையே காணப்படுவது குறிப்பிடத்தக்கது. மிகக் குறைந்த மட்டத்தில் 3.4 சதவீதம் ஏனைய உயர் கற்கை மேற்கொள்ளும் மாணவர்கள் மத்தியில் காணப்படுகின்றது. கல்வி நிலை அடிப்படையில் இளங்கலைப்பட்ட மாணவர்கள் மத்தியில் அதிகளவான நுகர்வு காணப்பட்டாலும் சுமார் 67.2 சதவீதமான துரித உணவு நுகர்வானது 18 வயதிற்கும் குறைவானவர்களிடையே காணப்படுவது முனைப்பான அம்சமாகும்.

நகரவாசிகளின் கல்வி நிலை அடிப்படையில் நோக்கும் போது, பாடசாலை மாணவர்கள் மற்றும் இளங்கலை பட்டப்படிப்பினை மேற்கொள்ளும் பல்கலைக்கழக மாணவர்களிடையே சுமார் 91.3 சதவீதம் அளவில் அதிகளவான துரித உணவு நுகர்வானது காணப்படுகின்றது. இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட இன்னுமொரு ஆய்வுடன் ஒப்பிடுகையில் பட்டதாரிகளிடையே 61% துரித உணவு நுகர்வு காணப்பட்டுள்ளது (Nirmani et al., 2017). எனவே பாடசாலைகளை மையப்படுத்திய மட்டுப்படுத்தப்பட்ட ஆய்வுகள் காணப்படுவதினால் குறித்த பெறுபேறுகளை ஒப்பிடுவதில் சிக்கல் நிலை காணப்படுகின்றது. எனினும் மலேசிய இளைஞர்களிடம் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் துரித உணவு நுகர்வோர்களில் 88.1 சதவீதமானவர்கள் பட்டக்கல்வியை தொடரக்கூடியவர்களே அதிகம் நுகர்ந்துள்ளனர் (Hatta et al., 2022). இந்நிலைமையை குறித்த ஆய்வுப் பிரதேச முடிவுகளுடன் ஒப்பிடுகையில் இளங்கலை மற்றும் முதுகலை பட்டப்படிப்பினை மேற்கொள்பவர்களிடம் சுமர் 29.3 சதவீதம் அளவில் துரித உணவு நுகர்வுக் காணப்படுகின்றது. கல்வித் தரமுடையவர்கள் அதிகரித்த துரித உணவு நுகர்வின் ஆரோக்கியப் பிரச்சினைகள் தொடர்பான விழிப்புணர்வுகளை பெற்றிருந்த போதிலும் குறித்த ஆய்வுப் பிரதேசம் நகர்ப்பகுதியாகக் காணப்படுவதுடன் துரித உணவகங்களின் பரம்பல் செறிந்து காணப்படுவதனால் குறிப்பாக கற்கக் கூடிய மாணவர்கள் இலகுவில் பெற்றுக்கொள்ள முடியுமாக இருத்தல், உண்பதற்கு சௌகரியமாக இருத்தல் போன்றவற்றின் காரணமாக அதிகளவில் துரித உணவில் நாட்டம் கொள்கின்றனர். மேலும் பாடசாலைகளைச் சூழ அருகாமையில் துரித உணவகங்கள் அமையப் பெற்றிருப்பது சிறுவர்களை தூண்டுவதாக அமைகின்றது.





**உரு 6: துரித உணவு நுகர்வாளர்களின் கல்வி நிலை**

மூலம்: கள ஆய்வு, 2025

### தொழில் நிலை

துரித உணவு நுகர்வாளர்களின் தொழில் நிலை அடிப்படையில் நோக்கும் போது உரு 7 இல் காட்டப்பட்டுள்ளவாறு, தொழில் புரிபவர் 26.7 சதவீதமும், தொழில் அற்றவர் 15.5 சதவீதமும் சுயதொழில் புரிபவர் 10.3 சதவீதமும் மாணவர்கள் 47.4 சதவீதமும் துரித உணவை நுகர்கின்றனர். மிகக் குறைந்த மட்டத்தில் சுய தொழில் புரிபவர்களும், அதிகளவில் மாணவர்களும் துரித உணவை நுகர்பவர்களாக காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.




**உரு 7: துரித உணவு நுகர்வாளர்களின் தொழில் நிலை**


மூலம்: கள ஆய்வு, 2025

மொரோக்கோ துரித உணவு நுகர்வாளர்கள் முக்கியமாக இளம் வயதான, அதிக வேலைப்பளுமிக்கவர்களாகக் காணப்படும் அதேவேளை நேரத்தை சேமித்து விரைவான சேவையைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் அதிகமாக துரித உணவை நுகர்கின்றனர் (Goubraim & Chakor, 2015). இவ் முன்னோடி ஆய்வுடன் மிக நெருங்கிய தொடர்பை இவ்வாய்வு கொண்டுள்ளமையினை அவதானிக்கலாம். எனவே குறித்த ஆய்வுப் பிரதேசம் நகர்ப் பகுதியாகக் காணப்படுகின்ற அதேவேளை வேலைப்பளுமிக்க வாழ்க்கை முறையினை ஆண்கள் மற்றும் பெண்கள் கொண்டிருப்பதனால் நேரக் கட்டுப்பாடுகள், வீட்டில் சமைப்பதற்கான நேரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளமை, அதிகரித்த அலுவலக வேலை நேரம் போன்ற காரணிகள் துரித உணவை அணுகுவதிலும் இலகுவில் பெற்றுக் கொள்ளக்கூடிய வாய்ப்புக்களினையும் அதிகளவில் கொண்டிருப்பதோடு, சௌகரியம் மற்றும் விரைவான சேவையைப் பெற்றுக்கொள்ள துரித உணவு அதிகளவான வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுப்பதனால் நகரவாசிகளிடையே அதிகளவான நுகர்வு காணப்படுகின்றது.

### திருமண நிலை

துரித உணவு நுகர்வாளர்களின் திருமண நிலை அடிப்படையில் நோக்கும் போது உரு 8 இல் காட்டப்பட்டுள்ளவாறு, திருமணமாகாதவர்கள் 68.1 சதவீதம், திருமணமானவர்கள் 30.2 சதவீதம், விவாகரத்தானவர்கள் 0.9 சதவீதம், மற்றும் விதவைகள் 0.9 சதவீதம் எனும் அடிப்படையிலே துரித உணவை நுகர்பவர்கள் காணப்படுகின்றனர். எனவே திருமணமாகாதவர்கள் இடையே அதிகளவான துரித உணவு நுகர்வுப் பழக்கம் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாக இருப்பினும் விவாகரத்தானவர்கள் மற்றும் விதவைகள் ஆகியோரிடையே மிகவும் குறைந்தளவான நுகர்வு காணப்படுகின்றது. எனவே குறித்த ஆய்வுப் பிரதேசத்தில் துரித உணவை அதிகளவில்

நுகர்பவர்களாக சிறுவர்கள் மற்றும் இளைஞர்கள் சுமார் 80.1 சதவீதம் அடையாளம் காணப்பட்டுள்ளமை திருமணமாகாதவர்களின் அதிகளவான நுகர்வினை உறுதிப்படுத்துகின்றது.




**உரு 8: துரித உணவு நுகர்வாளர்களின் திருமண நிலை**

மூலம்: கள ஆய்வு, 2025

மேலே குறிப்பிடப்பட்டவாறு ஆய்வுப்பிரதேச நகரவாசிகளின் துரித உணவு நுகர்வில் சமூகக் குடித்தொகைக் காரணிகளின் செல்வாக்கு அமையப்பெறுகின்றது. மேலும் நடத்தைப் புவியியலின் நோக்கில், தனிநபர்கள் அமைவிடம் மற்றும் இடஞ்சார்ந்த தோற்றப்பாட்டை எவ்வாறு உணர்கின்றார்கள், சிந்திக்கின்றார்கள் மற்றும் முடிவுகளை எடுக்கின்றார்கள் என்பதை புரிந்துகொள்வதற்கு துரித உணவு நுகர்வு நடத்தையில் நகரவாசிகளின் கருத்து மற்றும் மனப்பாங்குகள், நடத்தை எதிர்வினை, மற்றும் இடஞ்சார்ந்த பாங்குகள் போன்றன எவ்விதம் சமூகக் குடித்தொகைக் காரணிகளுடன் தொடர்புபடுகின்றன என்பதனை கீழ்வருமாறு நோக்கலாம்.

### 4.2 துரித உணவு நுகர்வு நடத்தையில் நகரவாசிகளின் கருத்து மற்றும் மனப்பாங்குகள் (Perception & Attitudes)

கருத்து மற்றும் மனப்பாங்குகளின் அடிப்படையில் நோக்கும் போது நகரவாசிகளின் துரித உணவு நுகர்விற்கான காரணங்கள் மற்றும் துரித உணவு நுகர்வால் ஏற்படும் ஆரோக்கிய சீர்கேடுகள் தொடர்பான நகரவாசிகளது எண்ணப்பாடுகள் ஆகிய இரு விடயங்களை மையப்படுத்தி இப்பகுதியில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. நகரவாசிகளின் துரித உணவு நுகர்விற்கான காரணங்களை நோக்கும் போது சுவை மற்றும் பன்முகத்தன்மைக்காக 99.1 சதவீதமும், மலிவு விலைக்காக 31.9 சதவீதமும், உணவகம் அருகாமையில் காணப்படுவதால் 76.7 சதவீதமும், கலாசார விருப்பம் மற்றும் நண்பர்கள் காரணமாக 75.9 சதவீதமும், சமைப்பதில் உள்ள சோம்பேறித்தன்மை காரணமாக 42.2 சதவீதமும் விளம்பரங்கள் மற்றும் தள்ளுபடிகள் காரணமாக முறையே 75.9 சதவீதம் மற்றும் 86.2 சதவீதமும், சௌகரியத் தன்மை காரணமாக 62.9 சதவீதமும், சந்தைப்படுத்தல் மற்றும் அணுகல் வசதி காரணமாக 65.5 சதவீதமும், வேலைப்பளு காரணமாக 62.9 சதவீதமும், வாழ்க்கை முறை மற்றும் நேரக் கட்டுப்பாடு காரணமாக 62.1 சதவீதமும், சகாக்கள் மற்றும் குடும்பத்தின் தாக்கம் காரணமாக 73.3 சதவீதமும் நகரவாசிகள் துரித உணவை நுகர்கின்றனர். அந்த அடிப்படையில் அதிகளவில் சுவை மற்றும் பன்முகத்தன்மை காரணமாகவும், அதற்கடுத்தபடியாக தள்ளுபடிகள் காரணமாகவும் அதிகளவான நுகர்வு காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. எனினும் மிகக் குறைந்தளவானவர்கள் மலிவு விலை காரணமாகத் துரித உணவை நுகர்வதாகக் குறிப்பிட்டுள்ளனர். 50 சதவீதத்திற்கும் குறைவானவர்களே சமைப்பதிலுள்ள சோம்பேறித்தனம் காரணமாகத் துரித உணவை அதிகம்

உட்கொள்கின்றனர். இவ்வாறு நகரவாசிகளின் துரித உணவு நுகர்வில் மேற்கூறப்பட்ட மனப்பாங்குகள் செல்வாக்குச் செலுத்துகின்றன. எனவே இங்கு வயது அடிப்படையில், 42.2 சதவீதமான 18 வயதிற்கும் குறைவான சிறுவர்கள் சுவை மற்றும் பன்முகத்தன்மைக்காகவும் விளம்பரங்கள் மற்றும் அணுகல் வசதி காரணமாகவும் அதிகளவில் துரித உணவை நுகர்கின்றனர். கல்வி நிலை அடிப்படையில் 25 சதவீதமான இளங்கலைப்பட்ட மாணவர்கள் உணவகம் அருகாமையில் காணப்படுதல், கலாசார விருப்பம் மற்றும் நண்பர்கள், விளம்பரங்கள் மற்றும் தள்ளுபடிகள், சௌகரியத் தன்மை போன்ற காரணங்களால் அதிகளவில் துரித உணவை நுகர்கின்றனர். தொழில் நிலை அடிப்படையில் 26.7 சதவீதமான தொழில் புரிபவர்களிடையே மலிவு விலை, உணவகம் அருகாமையில் காணப்படுதல், வேலைப்பளு, குறிப்பாக பெண்கள் சமைப்பதில் உள்ள சோம்பேறித்தன்மை, சௌகரியத் தன்மை, வாழ்க்கை முறை மற்றும் நேரக் கட்டுப்பாடுகள் போன்ற காரணங்களால் அதிகளவில் துரித உணவை நுகர்கின்றனர்.

துரித உணவு நுகர்வால் ஏற்படும் ஆரோக்கிய சீர்கேடுகள் தொடர்பான நகரவாசிகளது எண்ணப்பாடுகளை நோக்கும் போது உடல் மற்றும் உள ரீதியான நோய் நிலைமைகளை அடையாளப்படுத்தியுள்ளதுடன் குறிப்பாக 98.3 சதவீதமானவர்கள் அதிக எடையுடன் தொடர்புடைய நோய்களை ஏற்படுத்தும் என கருதுகின்றனர். மிகக் குறைவான மட்டத்தில் ஒவ்வாமை மற்றும் பசியின்மை ஏற்படுவதாக மக்கள் கருதுகின்றனர். எடை அதிகரிப்பு 95. 7 சதவீதமும் உடல் பருமன் 94.8 சதவீதமும் நீரிழிவு நோய் 94 சதவீதமும் உயர் இரத்த அழுத்தம் 87.9 சதவீதமும் போசணைக் குறைபாடு 85.3 சதவீதமும் கொழுப்பு 95.7 சதவீதமும் இதய நோய்கள் 94.8 சதவீதமும் பக்கவாதம் 77.6 சதவீதமும் சோர்வு 76.7 சதவீதமும் அடிக்கடி பசி 76.7 சதவீதமும் தீவிர பதட்டம் 65.5 சதவீதமும் மனஅழுத்தம் 74.1 சதவீதமும் ஹைபர்டென்ஷன் 73.3 சதவீதமும் சோம்பல் 92.2 சதவீதமும் அறிவாற்றல் கோளாறுகள் 75.9 சதவீதமும் புற்றுநோய் 2.7 சதவீதமும் வயிற்றோட்டம் 1.8 சதவீதமும் இரைப்பை அழற்சி 2.7 சதவீதமும் அதிகரித்த துரித உணவு நுகர்வால் ஏற்படும் என மக்கள் கருதுகின்றனர். எனவே இங்கு வயது அடிப்படையில் 15 வயதிற்கு மேற்பட்டோர்கள், பால் அடிப்படையில் ஆண்கள் மற்றும் பெண்கள், கல்வி அடிப்படையில் பாடசாலை மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள் ஆகியோர்களதும் இனம், தொழில் நிலை, மாதவருமானம் போன்றவற்றின் அடிப்படையில் அனைத்து தரப்பினர்களதும் எண்ணப்பாடுகளாக மேற்கூறப்பட்ட துரித உணவு நுகர்வால் ஏற்படும் ஆரோக்கிய சீர்கேடுகள் காணப்படுகின்றன.

### 4.3 துரித உணவு நுகர்வு நடத்தையில் நகரவாசிகளின் நடத்தை எதிர்வினை (Behavioral Response)

நடத்தை எதிர்வினை அடிப்படையில் நோக்கும் போது மாதம் ஒன்றிற்கான நகரவாசிகளின் துரித உணவு நுகர்வுத் தடவைகள், ஒரு மாதத்திற்கு நகரவாசிகளின் துரித உணவு நுகர்விற்கான சராசரி செலவு மற்றும் நகரவாசிகளின் துரித உணவுகளின் விருப்பத்தெரிவு ஆகிய மூன்று விடயங்களை மையப்படுத்தி இப்பகுதியில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. நகரவாசிகளது மாதம் ஒன்றிற்கான துரித உணவு நுகர்வுத் தடவைகளானவை முறையே, மாதத்திற்கு ஒரு தடவை 21.6 சதவீதமானோரும் மாதத்திற்கு 3 தடவைகள் 31.9 சதவீதமானோரும் வாரத்திற்கு ஒரு தடைவ 26.7 சதவீதமானோரும் மாதத்திற்கு 5 தடவைகளுக்கு மேல் 13.8 சதவீதமானோரும் ஒவ்வொரு நாளும் 6 சதவீதமானோரும் துரித உணவை நுகர்கின்றனர். எனவே மாதம் ஒன்றிற்கு ஒவ்வொரு நாளும் துரித உணவை நுகர்பவர்கள் மிகக் குறைகாகக் காணப்பட்டாலும் சராசரியாக மாதத்திற்கு 3 தடவைகளுக்கு மேல் சுமார் 78.4 சதவீதமானோர்களால் அதிகளவில் துரித உணவு நுகரப்படுவது முனைப்பான அம்சமாகும். எனவே இங்கு சமூகக் குடித்தொகைக் காரணிகளுடனான தொடர்புத்தன்மையை நோக்கும் போது வயது அடிப்படையில் 29 வயதிற்கும் குறைவானவர்களும் கல்வி நிலை அடிப்படையில் பாடசாலை மற்றும் பல்கலைக்கழக மாணவர்களும் மாதவருமானம் அடிப்படையில் நடுத்தர மற்றும் அதிக வருமானம் பெறுபவர்களுமே சராசரியாக மாதத்திற்கு 3 தடவைகளுக்கு மேல் துரித உணவை நுகர்பவர்களாகக் காணப்படுகின்றனர். மாற்றமாக குறைந்த மாதவருமானம் பெறுபவர்களும் ஆரோக்கிய சீர்கேடுகள் தொடர்பான விழிப்புணர்வைக்கொண்ட குடும்பத்தின் மூத்தஉறுப்பினர்களும் மாதத்திற்கு ஒரு தடவை துரித உணவை நுகர்கின்றனர்.

துரித உணவு நுகர்விற்காக மாதம் ஒன்றிற்கு ரூபா 5000 இற்கு குறைவாக 20 சதவீதமானோரும் ரூபா 5000–10000 இற்கு இடையில் 34 சதவீதமானோரும் ரூபா 10000 இற்கு மேல் 46 சதவீதமானோரும் செலவிடுகின்றனர். எனவே, இதிலிருந்து புலனாவது நகரவாசிகளில் அதிகளவானோர் ரூபா 10000 இற்கு மேல் துரித உணவு நுகர்விற்காக செலவிடுகின்றமை ஆகும். எனவே மாதவருமானம் அடிப்படையில் நோக்கும் போது நடுத்தர மற்றும் அதிக மாதவருமானம் பெறுபவர்களே மாதம் ஒன்றிற்கு ரூபா 10000 இற்கு மேல் துரித உணவு நுகர்விற்காக செலவிடுகின்றனர். மேலும் போதியளவான மாதவருமானத்தை தொழில்புரிவதன் மூலம் பெற்றுக்கொள்ளும் ஆண்கள் மற்றும் பெண்கள் உணவகம் அருகாமையில் காணப்படுதல், வேலைப்பளு, குறிப்பாக பெண்கள் சமைப்பதில் உள்ள சோம்பேறித்தன்மை, சௌகரியத் தன்மை, வாழ்க்கை முறை மற்றும் நேரக் கட்டுப்பாடுகள் போன்ற காரணங்களால் அதிகளவில் துரித உணவை நுகர்வதுடன் அவர்களால் மாதம் ஒன்றிற்கான துரித உணவு நுகர்வுச் செலவை ஈடுசெய்ய முடிகின்றது.

நகரவாசிகளின் துரித உணவுகளின் விருப்பத்தெரிவு அடிப்படையில் நோக்கும் போது மிகக் குறைந்த மட்டத்தில் சவர்மா 2.7 சதவீதமானோரும் டெஸேட்ஸ் பிவரேட்ஜ் 87.1 சதவீதமானோரும் கார்லிக்பிரட் 81 சதவீதமானோரும் பாஸ்டா 88.8 சதவீதமானோரும் பிரன்ச்பிரய்ஸ் 87.9 சதவீதமானோரும் சென்விட்ச் 87.9 சதவீதமானோரும் பிரய்ட்சிகன் 92.2 சதவீதமானோரும் பிஸ்ஸா 97.4 சதவீதமானோரும் சப்மெரின் 91.4 சதவீதமானோரும் பேர்கர் 94 சதவீதமானோரும் நுகர்கின்றனர். எனவே சவர்மா தவிர ஏனைய உணவுகள் 80 சதவீதமானோருக்கு மேல் அதிகளவில் நுகர்கின்றனர். பிஸ்ஸா, பேர்கர், பிரய்ட்சிகன், சப்மெரின் போன்ற துரித உணவுகள் 0-29 வயதிற்குட்பட்ட சிறுவர்கள் மற்றும் இளைஞர்களால் அதிகளவில் நுகரப்படுகின்றன. மேலும் இளங்கலைப்பட்ட மாணவர்கள் சகாக்களுடன் இணைந்து பொழுதுபோக்கிற்காகவும் தொழில் புரிபவர்கள் சாப்பிடுவதிலுள்ள சௌகரியத்தன்மை காரணமாகவும் மேலே குறிப்பிட்ட துரித உணவுகளை அதிகளவில் தேர்ந்தெடுக்கின்றனர்.

### 4.4 துரித உணவு நுகர்வு நடத்தையில் நகரவாசிகளின் இடஞ்சார்ந்த பாங்கு (Spatial Pattern)

வத்தளை-மாபோல நகர சபையில் உள்ள பெரும்பாலான துரித உணவு நுகர்வாளர்கள் துரித உணவு விற்பனை நிலையங்களிலிருந்து ஒப்பீட்டளவில் குறுகிய தூரத்தில் வசிக்கின்றனர் எனும் விடயம் கண்டறியப்பட்டுள்ளது. அருகாமை பகுப்பாய்வின்படி பதிலளித்தவர்களில் 25 சதவீதமானோர் 1 கிலோமீற்றருக்குள்ளும், 72.4 சதவீதமானோர் 1–3 கிலோமீற்றருக்கு இடையிலும், மற்றும் துரித உணவு விற்பனை நிலையத்திலிருந்து 3 கிலோமீற்றருக்கு அப்பால் 3.4 சதவீதமானோரும் வாழ்கின்றனர். இவ் இடஞ்சார்ந்த பாங்கானது, பெரும்பாலான நுகர்வாளர்கள் நகர்ப்புறத்திற்குள் எளிதில் அணுகக்கூடிய மண்டலங்களில் வசிக்கின்றனர் என்பதையும், குறிப்பாக துரித உணவு விற்பனை நிலையங்கள், முக்கிய சாலைகள் மற்றும் வணிக தாழ்வாரங்களில் அமைந்துள்ளன என்பதையும் குறிக்கின்றது. கடைகளுக்கு அருகில் வசிக்கும் அல்லது வேலை செய்யும் நபர்கள் அதிக வெளிப்பாடு மற்றும் வசதியைக் கொண்டிருப்பதால், நுகர்வு நடத்தையை வடிவமைப்பதில் அருகாமை மற்றும் அணுகல் குறிப்பிடத்தக்க பங்கைக் கொண்டுள்ளன என முடிவுகள் தெரிவிக்கின்றன, இது மனித இடஞ்சார்ந்த நடத்தை அறிவாற்றல் உணர்வுகள் மற்றும் சுற்றியுள்ள பௌதிக சூழல் இரண்டாலும் பாதிக்கப்படுகின்றது என்பதை வலியுறுத்தும் நடத்தைப் புவியியல் மாதிரியுடன் ஒத்துப்போகின்றது. எனவே, வத்தளை-மாபோல நகர சபையில், இடஞ்சார்ந்த அணுகல் துரித உணவு நுகர்வுக்கான நடத்தை போக்குகளை வலுப்படுத்துகின்றது. துரித உணவகங்களின் அமைவிடம் குடியிருப்புக்கள், வேலைத்தளங்கள் மற்றும் பாடசாலைகளைச் சூழவும் நடுத்தர மற்றும் அதிகவருமானம் கொண்ட தாழ்வாரங்களைச் சூழவும் காணப்படுவதனால் தொழில் புரிபவர்கள், சிறுவர்கள் மற்றும் இளைஞர்களின் அதிக நுகர்விற்கு காரணமாக அமைகின்றது. நகர்ப்புற அமைப்பு மற்றும் இருப்பிட வசதி உணவு தொடர்பான முடிவுகளை வடிவமைக்க சமூகக் குடித்தொகைக் காரணிகளுடன் எவ்வாறு தொடர்பு கொள்கின்றன என்பதைப் பிரதிபலிக்கின்றது.

## 5. முடிவுரை மற்றும் பரிந்துரைகள்

இவ் ஆய்வு, நகர்ப்புறவாசிகளிடையே துரித உணவு நுகர்வு நடத்தையை சமூகக் குடித்தொகைக் காரணிகள் எவ்வாறு பாதிக்கின்றன என்பதை நடத்தை புவியியல் மாதிரியின் பார்வையில் ஆய்வு செய்தது. வயது, வருமானம், கல்வி மற்றும் தொழில் போன்ற சமூகக் குடித்தொகைப் பண்புகள் தனிநபர்களின் கருத்துக்கள், விருப்பங்கள் மற்றும் துரித உணவு நுகர்வு அதிர்வெண்ணை கணிசமாக வடிவமைக்கின்றன என்பதை முடிவுகள் வெளிப்படுத்தின. வயது அடிப்படையில் சுமார் 80.1 சதவீதமான 0–29 வயதிற்கு இடைப்பட்ட சிறுவர்கள் மற்றும் இளம் வயதுப் பிரிவினர்களிடையேயும் மாதவருமான அடிப்படையில் ரூபா 60001 இற்கு மேல் 71.5 சதவீதமான மத்திம மற்றும் அதிக வருமானம் பெறுபவர்களிடையேயும் கல்வி நிலை அடிப்படையில் 18 வயதிற்கும் குறைவான பாடசாலை மாணவர்கள் மற்றும் இளங்கலைப்பட்ட மாணவர்கள் ஆகியோரிடையேயும் சுமார் 67.2 சதவீதம் அளவில் அதிகளவான துரித உணவு நுகர்வானது காணப்படுகின்றது. எனவே இளைய, நடுத்தர மற்றும் அதிக வருமானம் மற்றும் பணிபுரியும் நபர்கள் அடிக்கடி துரித உணவை உட்கொள்வதற்கான வாய்ப்புகள் அதிகம், இது மாறிவரும் நகர்ப்புற வாழ்க்கை முறைகளையும் நவீன வேலைவாய்ப்பு முறைகளுடன் தொடர்புடைய நேரக் கட்டுப்பாடுகளையும் பிரதிபலிக்கின்றது. மேலும் சுவை மற்றும் பன்முகத்தன்மை, கலாசார விருப்பம் மற்றும் நண்பர்கள், சமைப்பதில் உள்ள சோம்பேறித்தன்மை, விளம்பரங்கள் மற்றும் தள்ளுபடிகள், சௌகரியத் தன்மை, சகாக்கள் மற்றும் குடும்பத்தின் தாக்கம் போன்ற பல்வேறு நடத்தை மற்றும் மனப்பாங்குகள் காரணமாக நகரவாசிகள் அதிகளவில் துரித உணவை நுகர்கின்றனர். இடஞ்சார்ந்த பகுப்பாய்வு மேலும் அருகாமை மற்றும் அணுகல் நுகர்வு நடத்தையை கடுமையாக பாதிக்கிறது என்பதைக் குறிக்கின்றது. பதிலளித்தவர்களில் கணிசமானோர் (72.4%) துரித உணவு விற்பனை நிலையத்திலிருந்து 1–3 கிலோமீற்றருக்குள் வாழ்கின்றமை குறிப்பிடத்தக்கது, இது நகர்ப்புற அமைப்பு மற்றும் விற்பனை நிலையங்களின் இருப்பிட வசதி நுகர்வை ஊக்குவிப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது என்பதைக் குறிக்கின்றது. இவ் முடிவானது நடத்தை புவியியலின் முக்கிய கொள்கையை வலுப்படுத்துகின்றது, மேலும் இடஞ்சார்ந்த நடத்தை என்பது தனிப்பட்ட கருத்து மற்றும் முடிவெடுப்பதன் விளைவாக மட்டுமல்ல, சுற்றுச்சூழல் வாய்ப்பின் விளைவாகும் என்று குறிப்பிடுகின்றது.

ஒட்டுமொத்தமாக, வத்தளையில் துரித உணவு நுகர்வு சமூகப் புலனுணர்வு மற்றும் இடஞ்சார்ந்த பரிமாணங்களின் கலவையால் வடிவமைக்கப்பட்டுள்ளது என்று ஆய்வு முடிவு செய்கின்றது, இங்கு தனிப்பட்ட சமூகக் குடித்தொகைக் காரணிகள் நகர்ப்புற அணுகல் முறைகளுடன் தொடர்பு கொண்டு தனித்துவமான நுகர்வு நடத்தைகளை உருவாக்குகின்றன. நகர்ப்புற திட்டமிடுபவர்கள் மற்றும் பொதுச் சுகாதாரக் கொள்கை வகுப்பாளர்கள் இவ் நடத்தை மற்றும் இடஞ்சார்ந்த இணைப்புகளை அங்கீகரிப்பது மிகவும் நிலையான உணவுச் சூழல்களை வடிவமைக்கவும், வேகமாக நகரமயமாக்கப்படும் பகுதிகளில் ஆரோக்கியமான உணவுப் பழக்கத்தை ஊக்குவிக்கவும் அவசியம்.

**வத்தளையில் நகர்ப்புறவாசிகளிடையே துரித உணவு நுகர்வை பாதிக்கும் நடத்தை மற்றும் இடஞ்சார்ந்த காரணிகளை நிவர்த்தி செய்வதற்கான சில நடவடிக்கைகளை இவ் ஆய்வு பரிந்துரைக்கின்றது:**

- **சுகாதார விழிப்புணர்வு:** அடிக்கடி துரித உணவு நுகர்வின் உடல்நல பாதிப்புக்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த சமூக அடிப்படையிலான கல்வித் திட்டங்களை ஊக்குவித்தல், குறிப்பாக இளைஞர்கள் மற்றும் வேலை செய்யும் பெரியவர்களிடையே.
- **நகர திட்டமிடல் கட்டுப்பாடுகள்:** குடியிருப்பு மற்றும் பாடசாலைப் பகுதிகளில் அதிகப்படியான வெளிப்பாட்டைக் குறைக்க பயனுள்ள நகர்ப்புற திட்டமிடல் மூலம் துரித உணவு விற்பனை நிலையங்களின் இருப்பிடம் மற்றும் அடர்த்தியை ஒழுங்குபடுத்துதல்.
- **ஆரோக்கியமான மாற்று வழிமுறைகளை ஊக்குவித்தல்:** நகர்ப்புற மையங்களுக்குள் மலிவு விலையில் மற்றும் அணுகக்கூடிய ஆரோக்கியமான உணவு விற்பனை நிலையங்களை நிறுவுவதை ஆதரித்தல்.

- **நடத்தை அடிப்படையிலான தலையீடுகள்:** ஆரோக்கியமான உணவுத் தேர்வுகளை நோக்கி தனிநபர்களை வழிநடத்த பொதுச் சுகாதார பிரச்சாரங்களில் நடத்தை நுண்ணறிவுகளை இணைத்தல்.
- **ஆராய்ச்சிகளை விரிவுபடுத்துதல்:** இலங்கை முழுவதும் துரித உணவு நுகர்வில் நடத்தை மற்றும் இடஞ்சார்ந்த போக்குகளை ஒப்பிட்டுப் பார்க்க இதே போன்ற ஆய்வுகளை பிற நகர்ப்புறங்களுக்கும் விரிவுபடுத்துதல்.

முடிவில், நகர்ப்புறங்களில் ஆரோக்கியமான உணவு முறைகளை மேம்படுத்துவதற்கான பயனுள்ள உத்திகளுக்கு நடத்தை புவியியல் நுண்ணறிவுகள், நகர்ப்புற திட்டமிடல் கொள்கைகள் மற்றும் பொதுச் சுகாதாரக் கொள்கைகளை ஒருங்கிணைக்கும் ஒருங்கிணைந்த அணுகுமுறை தேவைப்படுகின்றது. இத்தகைய ஒத்துழைப்பு எதிர்காலத்தில் மிகவும் நிலையான மற்றும் சுகாதார உணர்வுள்ள நகர்ப்புற சூழல்களுக்கு பங்களிக்கும்.

**உசாத்துணைகள்**


Arslan, N., Ceylan, J. A., & Hatipoğlu, A. (2022). The relationship of fast food consumption with sociodemographic factors, body mass index and dietary habits among university students. *Nutrition & Food Science*, *53*(1), 112–123. https://doi.org/10.1108/nfs-01-2022-0003

Divisional Secretariat - Wattala. (2024). *Sampath Pathikada: Divisional Secretariat Division - Wattala* [Unpublished internal document].

Eckert, J., & Vojnovic, I. (2017). Fast food landscapes: Exploring restaurant choice and travel behavior for residents living in lower eastside Detroit neighborhoods. *Applied Geography*, *89*, 41–51. https://doi.org/10.1016/j.apgeog.2017.09.011

Golledge, R. G., & Stimson, R. J. (1997). *Spatial behavior: A geographic perspective.* Guilford Press.

Goubraim, N., & Chakor, A. (2015). Impact of fast food on the socio-economic behavior of the Moroccan consumer: A study of the influencing factors. *IOSR Journal of Business and Management, 17*(6), 37-45. https://doi.org/10.9790/487X-17633745

Hatta, N. M., Ali, A., Yusof, A., Shukri, W. H. W. Z., & Kamarudin, K. S. (2022). Socio-Demographic determinants of Fast-Food consumption in Malaysian young adults. *Malaysian Applied Biology*, *51*(6), 65–72. https://doi.org/10.55230/mabjournal.v51i6.2392

Jayasinghe, J. M. J. K., & De Silva, L. P. U. (2014). Fast food consumption and health status of students of a university in Sri Lanka. *Journal of Food and Agriculture*, *7*(1–2), 38. https://doi.org/10.4038/jfa.v7i1-2.5192

Khongrangjem, T., Dsouza, S. M., Prabhu, P., Dhange, V. B., Pari, V., Ahirwar, S. K., & Sumit, K. (2018). *A study to assess the knowledge and practice of fast food consumption among Pre-University students in Udupi Taluk, Karnataka, India*. *Clinical Epidemiology and Global Health, 6*(3), 172–175. https://doi.org/10.1016/j.cegh.2017.11.003

Liu, B., Widener, M., Burgoine, T., & Hammond, D. (2020). Association between time-weighted activity space-based exposures to fast food outlets and fast food consumption among young adults in urban Canada. *International Journal of Behavioral Nutrition and Physical Activity*, *17*(1). https://doi.org/10.1186/s12966-020-00967-y

Nirmani, H., Gayathree, P. K., & Kumara, S. U. (2017). *Fast food consumption behaviour of Sri Lankans: With special reference to Gampaha and Colombo districts.* Indian Journal of Marketing Management, **3**(1), 1–25. University of Kelaniya, Sri Lanka.

Odongo, E. K., Cherono, D., Auma, S., Nyamoita, O., Hilda, C., Koech, K. N., Bitutu, M., & Jelagat, K. M. (2024). *Factors influencing the growth of fast-food market in Baraton Center* (Undergraduate thesis). University of Eastern Africa, Baraton. DOI: 10.13140/RG.2.2.15260.09607.

Oliveira, L., & Raposo, A. (2024). Factors that most influence the choice for fast food in a sample of higher education students in Portugal. *Nutrients*, *16*(7), 1007. https://doi.org/10.3390/nu16071007

Pandey, B., Reba, M., Joshi, P. K., D'Mello, S., & Seto, K. C. (2020). Urbanization and food consumption in India. *Scientific Reports, 10*(1), 17241. https://doi.org/10.1038/s41598-020-73313-8

Parvin, S., Kabir, R., Parsa, A. D., & Sivasubramanian, M. (2023). An Investigation into the Fast-Food Consumption Habits of Public Health and Nursing Students at the University of Sunderland in London, UK. *Libyan International Medical University Journal*, *08*(02), 063–069. https://doi.org/10.1055/s-0043-1776398

Priyanath, H. M., & Dasanayaka, P. A. N. C. (2022). Impact of fast-food consumption on overweight among young adults in Sri Lanka. *International Journal of Education, Teaching, and Social Sciences, 2*(3), 10-21. https://doi.org/10.47747/ijets.v2i3.728

Singh, M., & Mishra, S. (2014). *Effect of fast food consumption on the health of school-going children (9–13 years) in Lucknow district. Indian Streams Research Journal, 4*(6). Retrieved from https://www.isrj.net

Udurawana, Y. (2015). *A study on factors affecting consumers' fast food buying behaviour: Reference to Pizza Hut in the Anuradhapura city area, Sri Lanka*. *SSRN Electronic Journal*. https://doi.org/10.2139/ssrn.2690346

World Health Organization. (2016). *Nutrition, physical activity, and obesity: Fast food facts.* Retrieved November 3, 2024, from https://www.who.int